# 5. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (டான்ஹோப்)

தமிழ்நாட்டில் காய்கறி உற்பத்தி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்கீழ் 1994ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் இதன் தனி அலுவலராகவும், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் இதன் நிர்வாக இயக்குநராகவும் உள்ளார்கள்.

இதுவரையில் 3904 தோட்டக்கலைப் பயிர்சாகுபடி செய்யும் விவசாயிகள் உறுப்பினர் சந்தாவாக ஒரு விவசாயி ரூ.100 செலுத்தி இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

**இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

1. தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிப்பது
2. பழங்கள், காய்கறிகளை நவீன முறையில் விநியோகம் செய்ய வழிவகை செய்யும் வகையில் தரம் பிரித்தல் மற்றும் ஏற்றுமதிக்கான வசதிகளை ஏற்படுத்துதல்
3. கூட்டுறவு முறையில் சில்லரை விற்பனை கடைகள் மூலம் விற்பனை மேற்கொள்ளுதல் மற்றும் பதனிடப்பட்டும், பதனிடப்படாமலும் உள்ள பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்தல்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக செயல்படுத்தப்படும் பல்வேறு தோட்டக்கலை திட்டங்களுக்கு தேவையான நடவுச் செடிகள் மற்றும் இடுபொருட்களை டான்ஹோப் நிறுவனம் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது. தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மூலமாக இடுபொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.



அரசாணை எண்.444 நாள் 30.10.2007ன்படி தோட்டக்கலைத் துறைக்கான இடுபொருட்களை கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் ஒரு அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டது. இந்நிறுவனம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தும் முகமையாகவும் உள்ளது. இதில் காய்கறி மற்றும் பழங்கள் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக ஒரு தனி வணிக குறியீட்டுடன் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் அமைக்கப்படவுள்ளது. இத்தகைய சில்லரை விற்பனை நிலையங்கள் 200 எண்கள் சென்னை மாநகரிலும், 100 எண்கள் கோவை மாநகரிலும் செயல்படவுள்ளது.

பெருநகர மக்களுக்கு தொடர்ச்சியாக காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு கிராமப்புறங்களையும் நகர்ப்புறங்களையும் இணைப்பதற்கான உள்ளீட்டு வசதிகளை ஏற்படுத்துதுல் அத்தியாவசியமாகும். இவ்வாறு செய்வதன்மூலம் நகரங்களை சுற்றியுள்ள கிராம மக்கள் உயர்வருவாய் பெற இயலும். விவசாயக் குழுக்களை ஏற்படுத்தி அக்குழுக்களின் விளைப்பொருட்கள் மாவட்ட அளவிலான விவசாயிகள் சங்கங்களுக்கு வழங்கப்படும். தனியார் தொழில்முனைவோரின் ஒத்துழைப்புடன் இவ்விளைப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு தரம்பிரிக்கப்பட்டு பாலித்தீன் பைகளில் சிப்பமிட்டு நகரங்களில் ஏற்படுத்தப்படும் சில்லரை காய்கறி அங்காடிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும். காய்கறிகள் சாகுபடி செய்தல், விவசாய குழுக்கள் அமைத்தல், விவசாயிகள் சங்கம் அமைத்தல், காய்கறிகள் சேகரிப்பு மையம் அமைத்தல், காய்கறிகளை கொண்டுவருவதற்கு குளிரூட்டப்பட்ட வாகனங்கள், சில்லரை விற்பனை அங்காடிகள் மற்றும் நடமாடும் அங்காடிகள் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

இத்திட்டம் 2011–2012ம் ஆண்டில் சென்னையில் மட்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ரூ.1700 இலட்சம் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012–2013ம் ஆண்டில் ரூ.1701 இலட்சம் ஒதுக்கீட்டில், இத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது.

-